## பெப்ரவரி – 18 - சனி

### புனித மரி பெர்னதெத் சூபிரு

நாள்தோறும் உம்மைப் போற்றுவேன்: உமது பெயரை என்றும் எப்பொழுதும் புகழ்வேன். திபா. 145:2

---

**முதல் வாசகம்: ஏபிரேயர் 11 : 1 – 7**

விசுவாசம் என்பது நாம் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதி.கண்ணுக்குப் புலப்படாதவை பற்றி மனந்தளராத நிலை. இந்த விசுவாசத்தின் பொருட்டே நம் முன்னோர் நற்பெயர் பெற்றனர்.உலகங்களெல்லாம் கடவுளின் திருச்சொல்லால் உருவாயின என்றும், ஆகவே காணாதவற்றினின்று காண்பவை உண்டாயின என்றும் விசுவாசத்தினாலேயே உணர்கிறோம். விசுவாசத்தினால் தான் ஆபேல் காயினை விட மேலான பலியைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தான் விசுவாசத்தினாலேயே, அவன் நல்லவன் எனக் கடவுளிடமிருந்து சான்று பெற்றான் ஏனெனில், அவனுடைய காணிக்கைகள் ஏற்றவையெனக் கடவுளே சான்று பகர்ந்தார். இறந்தும் அவ்விசுவாசத்தினால் இன்னும் பேசுகிறான். விசுவாசத்தினாலேயே ஏனோக் சாவைக் காணாதபடி எடுத்துக்கொள்ளப்பட்டார். கடவுள் அவரை மேலே எடுத்துக்கொண்டதால் மறைந்து போய்விட்டார். மேலே எடுத்துக்கொள்ளப்பட முன்பே கடவுளுக்கு உகந்தவர் என்று நற்சான்று பெற்றவரானார். விசுவாசத்தினாலன்றி ஒருவனும் கடவுளுக்கு உகந்தவனாயிருக்க இயலாது. ஏனெனில், கடவுளை அணுகிச் செல்கிறவன் அவர் இருக்கிறார் என்றும், தம்மைத் தேடுபவர்களுக்குத் தக்க கைம்மாறு அளிக்கிறாரென்றும் விசுவசிக்க வேண்டும். விசுவாசத்தினாலே, தம் கண்ணுக்கு மறைவாயிருந்ததைக் குறித்து நோவா இறைவனால் எச்சரிக்கப் பெற்றபோது, தம் குடும்பத்தைக் காப்பாற்றப் பயபக்தியோடு பேழையை அமைத்தார். அதே விசுவாசத்தினால் உலகைக் கண்டனம் செய்து, விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவராகும் பேற்றுக்கு உரிமையாளர் ஆனார்.

**பதில்பாடல்:** ஆண்டவரே உமது பெயரை எப்பொழுதும் போற்றுவேன்

**நற்செய்தி: மாற்கு 9: 2 - 13**

ஆறு நாட்களுக்குப் பின் இயேசு இராயப்பரையும், யாகப்பரையும் அருளப்பரையும் அழைத்து ஓர் உயர்ந்த மலைக்குத் தனிமையில் ஒதுக்கமாய்க் கூட்டிக்கொண்டுபோய் அவர்களுக்குமுன் உருமாறினார். அவர் ஆடைகள் வெள்ளை வெளேரென ஒளிவீசின. இவ்வுலகில் எந்தச் சலவைக்காரனும் அதுபோல வெளுக்க முடியாது. எலியாசும் மோயீசனும் அவர்களுக்குத் தோன்றி, இயேசுவோடு உரையாடிக் கொண்டிருந்தனர். இராயப்பர் இயேசுவை நோக்கி, ”ராபி, நாம் இங்கே இருப்பது எத்துணை நன்று! உமக்கு ஒன்றும் மோயீசனுக்கு ஒன்றும் எலியாசுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரம் அமைப்போம்” என்றார். தாம் சொல்வது இன்னதென அறியாமலே சொன்னார். ஏனெனில், அவர்கள் பேரச்சம் கொண்டிருந்தனர். அப்போது மேகம், ஒன்று வந்து அவர்கள்மேல் நிழலிட, ”இவரே என் அன்பார்ந்த மகன், இவருக்குச் செவிசாயுங்கள்” என்ற குரலொலி மேகத்திலிருந்து கேட்டது. அவர்கள் உடனே சுற்றிலும் பார்த்தபோது, தங்கள் அருகில் இயேசு ஒருவரைத்தவிர வேறு எவரையும் காணவில்லை. மலையினின்று அவர்கள் இறங்கும் பொழுது, மனுமகன் இறந்தோரிடமிருந்து உயிர்க்கும்போதன்றி, அவர்கள் கண்டவற்றை ஒருவருக்கும் வெளிப்படுத்தக்கூடாது என்று அவர்அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் அவ்வார்த்தையை மனத்தில் இருத்தி, “இறந்தோரிடமிருந்து உயிர்க்கும்போது“ என்பதன் பொருள் என்ன என்று ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டனர். முதலில் எலியாஸ் வரவேண்டும் என்று மறைநூல் அறிஞர் கூறுவதேன்?” என அவர்கள் அவரைக் கேட்டனர். அவர், ”எலியாஸ் முதலில் வந்து எல்லாவற்றையும் ஒழுங்குப்படுத்தத்தான் போகிறார். ஆனால் மனுமகன் பாடுகள் பலபடவும், புறக்கணிக்கப்படவும் வேண்டுமென எழுதப்பட்டுள்ளதே, அது எப்படி? ஆகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எலியாஸ் வந்தாயிற்று. அவரைக் குறித்து எழுதப்பட்டுள்ளபடி அவர்கள் தாங்கள் விரும்பியதெல்லாம் அவருக்குச் செய்தார்கள்” என்றார்.

**தியானம்:** நம்பினோரை என்றும் கைவிடாத இறைவன். சங்கீத ஆசிரியர் 42:1 இல் “என் நெஞ்சே நீ நம்பிக்கை இழப்பது ஏன்? நீ கலக்க முறுவது ஏன், கடவுளையே நம்பியிரு” என்கிறார். மனித வாழ்வே நம்பிக்கையினால் தான் நகர்ந்து கொண்டிருக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி கிடைக்கும் உறுதி, கண்ணுக்கு புலப்படாத பற்றிய ஐயமற்றநிலை என்கிறது. ஆம் ஆபிரகாம் தம் சொந்தமகனையே பலியிட துணிந்தார். இவருடைய விழிப்பின் செயல்பாடுகளை கண்ட ஆண்டவர் அவரது இனத்தை வானத்து விண்மீன்களைப்போல பலுகி பெருக செய்து ஆசீர்வதித்தார். எந்த அளவுக்கு கடவுளுக்கும் ஆபிரகாமுக்கும் உள்ள உறவு வளரந்தது என்றால் எதையும் செய்ய ஆபிரகாம் தயாராகி விட்டார். ஏனென்றால் தனக்காக எதையும் கடவுள் செய்வார் என்ற நம்பிக்கை அவரது உள்ளத்தில் ஆழமாக பதிந்து விட்டது. நமது வாழ்வில் இத்தகைய நம்பிக்கை இருக்க வேண்டும். நாம் கடவுள் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையை நெருப்புக்கும் ,வாழ்வில் வரும் துன்பங்களை காற்றுக்கும் ஒப்பிடலாம் .நெருப்பு கொஞ்சமாக இருந்தால் காற்று இலேசாக அடித்தாலே அணைந்து விடுகிறது. மாறாக தீ அதிகமாக இருந்தால் காற்று அடிக்கும் போது தீயும் அதிகமாகிறது. அதாவது நாம் கடவுள் மீது கொண்டுள்ள நம்பிக்கை ஆழமற்று, மேலோட்டமாக இருந்தால் துன்பங்கள் நம்மை ஆட்டிப் படைத்துவிடும். எனவே மனித வாழ்வின் ஆதாரமே நம்பிக்கை தான். இதை உணர்ந்து நம்பிக்கையுடன் வாழ்வோம்.